செந்தமிழ் இலக்கணம்

ஐந்தாம் படிவம்
சிறப்புப் பகுதி



ஜெனரல் புக் கம்பெனி
கும்பகோணம்

செந்தமிழ் இலக்கணம்

ஐந்தாம் படிவம்—சிறப்புப் பகுதி

***

ஆசிரியர்கள்

வித்துவான் **த. சா. இராம ராவ்**

தலைமைத் தமிழாசிரியர்

ஸ்ரீநிவாச ராவ் உயர்நிலைப்பள்ளி, திருவையாறு.

வித்துவான் **வெ. கோபாலன், B. O. L.**

தலைமைத தமிழாசிரியர்

சிவராமி அய்யர் உயர்நிலைப் பள்ளி, திருககாட்டுப்பள்ளி.

***

ஜெனரல் புக் கம்பெனி

கும்பகோணம் சென்னை 1.

முதற் பதிப்பு—1955.

இரண்டாம் பதிப்பு—1956.

Vide Page 22 Supplement to the list of approved books Fort St George gazette, Part I-B, dated 4—4—'56.

விலை ரூ. 0—10—0

[illegible] யோபதி ப்ரஸ், கும்பகோணம்

முன்னுரை

'செந்தமிழ் இலக்கணம்' என்னும் இந்நூல், ஐந்தாம் படிவச் சிறப்புத் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உரியதாக, அண்மையில் அரசியலார் வெளியிட்ட பாட இயலை உளங் கொண்டு எழுதப் பெற்றுள்ளது.

நன்கு தெரிந்த உதாரணங்களைக் கொடுத்து அவற்றிலிருந்து விதிகளை அறியும் முறையிலே, செய்திகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆங்காங்குப் புதிய முறையில் போதிய பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. அவ்வப் பகுதியின் இறுதியிலுள்ள தேர்வு வினாக்கள் கற்றவற்றைக் கருத்திற்குக் கொணர்ந்து பயிலப் பயன்படும்.

கல்வித் துறைப் போகியார் இந் நூலினை ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
I.	எழுத்து:	
1.	எழுத்துக்களின் பொதுப்பிறப்பு	1
2.	உடனிலை மயக்கம், வேற்றுநிலை மயக்கம் ...	2
II.	சொல்:	
1.	பெயர்ச்சொல் ...	7
2.	வினைச்சொல்	13
3.	இடைச்சொற்கள் ...	18
4.	உரிச்சொல் ...	23
III.	பொது:	
1.	தொகையில் பொருள் சிறந்து நிற்குமிடம் ...	27
2.	மரபு ...	29
3.	வழுவமைதிகள் ...	31
4.	ஒரு பொருட் பன்மொழி—இரட்டைக் கிளவி—அடுக்குத்தொடர் ...	33
5.	உபலட்சணம் ...	36
IV.	புணர்ச்சி:	
1.	உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி ...	37
2.	உயிரீற்றில் இயல்பாக நிற்பவை ...	39
V.	யாப்பு:	
1.	சீர்பிரித்து வாய்பாடு கூறுதல் ...	43
2.	தளையின் பொது இலக்கணமும் வகையும் ...	43
3.	வெண்பா வகை ...	46
4.	ஆசிரியப்பாவின் வகை ...	48
5.	பாவினம் ...	50
VI.	அணி:	
1.	வேற்றுமையணி ...	54
2.	வஞ்சப் புகழ்ச்சியணி ...	55
3.	நிரல் நிறையணி ...	55
VII.	பொருளிலக்கணம் ...	57

செந்தமிழ் இலக்கணம்

ஐந்தாம் படிவம்—சிறப்புப் பகுதி

I எழுத்து

1. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு

மொழி தோன்றுவதற்கு முதற் காரணமான ஒலிகளே எழுத்து என்பதை முன்னர்ப் படித்தோம். அவ்வொலிகள் எங்ஙனம் பிறக்கின்றன என்பதைச் சிறிது காண்போம்.

நம்முள்ளே இருக்கும் மூச்சுக் காற்றே ஒலிக்குக் காரணமாகும். அதனை உள்ளிருந்து எழுப்பும் முறையை முயற்சி என்பர். அம் முயற்சி வேறுபாட்டால் ஒலிகளும் வேறுபடுகின்றன.

உந்தியிலிருந்து எழும் வளி (காற்று) நெஞ்சு, மிடறு, தலை, மூக்கு என்னும் நான்கிடங்களில் நிலைத்து நிற்கும். பிறகு பல், இதழ் (உதடு) நா, அண்ணம் (மேல் வாய்) முதலியவற்றின் முயற்சியால் வெவ்வேறு எழுத்து ஒலியாய் வெளிப்படும். இது எழுத்துக்கள் பிறக்கும் முறையாகும்.

தமிழெழுத்துக்களிலுள்ள உயிரெழுத்துக்களும் இடையெழுத்துக்களும் மிடற்று வளியால் பிறக்கின்றன. மெல்லெழுத்துக்கள் மூக்கின் வளியால் பிறக்கின்றன. வல்லெழுத்துக்கள் நெஞ்சு வளியால் பிறக்கின்றன. ஆய்த வெழுத்து தலை வளியால் பிறக்கின்றது.

(i) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டு உயிர்களும், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறு இடையின மெய்களும், மிடற்று வளியாற் பிறப்பன.

(ii) க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லின மெய்களும், நெஞ்சு வளியாற் பிறப்பன.

(iii) ங், ஞ், ண், ந், ம், ன் என்றும் ஆறு மெல்லின மெய்களும், மூக்கு வளியாற் பிறப்பன.

(iv) ஃ என்னும் மூன்று புள்ளி வடிவுடைய ஆய்த வெழுத்து தலை வளியாற் பிறப்பது.

சார்பெழுத்துக்கள் எல்லாம் தத்தம் முதலெழுத்துக்கள் பிறக்கும் இடங்களிலேயே பிறக்கும் இயல்புடையன என அறிக.

2. உடனிலை மயக்கம் வேற்றுநிலை மயக்கம்

பன்னிரண்டு உயிரும், க ச த ந ப ம வ ய ஞ ங என்னும் பத்து உயிர் மெய்யும் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களாகும் என்பதையும்,

பன்னிரண்டு உயிரும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், என்னும் பதினொரு மெய்யும், குற்றிய லுகரமுமாகிய இருபத்துநான்கும் மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களாகும் என்பதையும் முன்னமே அறிந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? இனி மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்களை நோக்குவோம்.

மொழிக்கு இடையில் உயிரும் உயிரும் சேர்ந்து வாரா. அவை உடம்படுமெய் பெற்றே வரும். அங்ஙனமே மெய்யோடு உயிரும் தனித்து வாரா. அவை இரண்டும் சேர்ந்து உயிர்மெய்யாகிவிடும். ஆதலால் அவை பற்றி அறிய வேண்டியது ஒன்றுமில்லை. எனவே, சொல் லுக்கு இடையில் மெய் முன்னர் மெய் வந்துசேரு வதைப்பற்றியே அறியவேண்டியிருக்கிறது. ஆத லால் இடைநிலை மயக்கத்தில் மெய்ம்மயக்கமே சொல்லப்படுறது.

மயக்கம் என்பதற்குச் சேர்க்கை என்பது பொருள். ஒவ்வொரு மெய்யும் பிறமெய்கள் எல்லாவற்றுடனும் சேர்ந்து வாராது. மெய்கள் மயங்கும் முறையைப் பொதுவாக நோக்குவோம்.

பக்கம், தச்சன், விட்டம், பத்து, உப்பு, பற்றும் என்னும் சொற்களின் இடையில் ககரம், சகரம், டகரம், தகரம், பகரம், றகரம் என்னும் மெய்கள் தம்முன் தாமே சேர்ந்து நிற்பதைக் காணலாம். இங்ஙனம் ஒரு மெய் தன்னோடு

தானே மயங்கிவருதல் உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

சங்கு வண்டு பாம்பு தெள்கு
பஞ்சம் கன்று பந்து மார்பு

இவ் வுதாரணங்களைக் காண்க. இச் சொற்களின் இடையில் ஙகரம், ஞகரம், ணகரம், னகரம், மகரம், நகரம், ளகரம், ரகரம் முதலிய மெய்கள் தம்மின் வேறாகிய மெய்களோடு சேர்ந்து வருதல் அறிக. இங்ஙனம் ஒரு மெய் வேறு மெய்யோடு மயங்கிவருதல் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

(i) உடனிலை மெய்ம்மயக்கம் :

பக்கம்
அச்சம்
வித்து
செப்பம்

என க் ச் த் ப் என்னும் நான்கு மெய்களும் தம் முன் தானே வந்து மயங்கின. இவை தம்முன் தாமேயன்றி பிறமெய்களோடு மயங்கி வாரா எனவறிக.

(ii) வேற்றுநிலை மெய்ம்மயக்கம் :

தேர்ச்சி பார்ப்பு மார்பு
காழ்ப்பு வீழ்ச்சி வாழ்வு

இச் சொற்களில் ரகர ழகர மெய்கள் வேறு மெய்களோடு வந்துள்ளமை காண்க. ரகர ழகர

மெய்கள் தம்முன் தாம் வாரா. அவை பிறமெய் களோடேயே மயங்கும்.

க், ச், த், ப், ர், ழ் என்னும் ஆறு மெய்கள் ஒழிந்த ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் என்னும் பன்னிரண்டு மெய்களும் தம்முன் தாமும், தம்முன் பிறவும் வந்து மயங்கும். அவற்றிற்கு உதாரணம்:—

அங்ஙனம்
பைஞ்ஞிலம்
வட்டம்
அண்ணன்
முந்நீர்
செம்மை
செய்யாள்
நல்லாள்
செவ்வி
உள்ளம்
கொற்றம
மன்னன்

} ஙகரம் முதலிய பன்னிரண்டு மெய்களும் உடனிலை மெய்ம் மயக்கமாக வந்தன.

தங்கம்
மஞ்சள்
உட்கு
வண்டு
தந்தை
பாமபு
செய்தான்
கல்வி
தெவ்யாது
கொள்கை
கொற்கை
மன்றல்

} ஙகரம் முதலிய பன்னிரண்டு மெய்களும் வேற்றுநிலை மெய்ம் மயக்கமாக வந்தன.

பயிற்சி

1. உந்தியிலிருந்து எழும் காற்று எவ்வெவ்விடங்களில் தங்குகிறது?

2 உயிரெழுத்துக்களும் மூவின மெய்யெழுத்துக்களும் எவ்வெவ்விடங்களிற் பிறக்கின்றன?

3. மெய்ம்மயக்கம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

4. தம்மொடு தாமே மயங்கும் எழுத்துக்கள் யாவை? உதாரணம் தருக.

5. வேற்றுநிலை மயக்கமாகவே வரும் எழுத்துக்கள் யாவை?

6 தம்மொடு தாமும், தம்மொடு பிறவும் வந்து மயங்கும் எழுத்துக்கள் யாவை?

II சொல்

1. பெயர்ச் சொல்

(i) விளியேலாப் பெயர்கள்:

எட்டாம் வேற்றுமை விளிவேற்றுமை எனப்படும் என்றும், படர்க்கையோரைத் தன் முகமாகத் தான் அழைப்பது விளித்தலாகும் என்றும், விளி வேற்றுமை ஏற்கும்போது பெயர்ச்சொற்கள் பல மாறுதல்களை அடையும் என்றும் முன் படிவத்தில் உணர்ந்தீர்கள். இப்பொழுது விளி வேற்றுமை ஏற்காத பெயர்ச்சொற்கள் யாவை என்பதை நோக்குவோம்.

படர்க்கையோரைத் தன் முகமாகத் தான் அழைத்தல் விளியாகும் என்றோம். அதனாலேயே தன்மையோரையும் முன்னிலையோரையும் விளித்தல் இல்லை என்பது விளங்குகிறதல்லவா? அன்றியும் படர்க்கைப் பெயர்களிலும் சில பெயர்கள் விளி வேற்றுமை ஏலா. அவற்றை யெல்லாம் இங்குக் காண்க:—

நான், யான், நாம், யாங்கள்—என்னும் தன்மைப் பெயர்களும்; நீ, நீயிர், நீவிர், நீர் என்னும் முன்னிலைப் பெயர்களும் விளியேற்கமாட்டா.

விளியேலாப் படர்க்கைப் பெயர்களாவன:—

1. நுமன், நுமள், நுமர்—இவை கிளைப்பெயர்கள்
2. எவன், எவள், எவர், எது, எவை
யாவன், யாவள், யாவர், யாது, யாவை
ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை } இவை வினாப் பெயர்கள்

3. அவன, அவள், அவர், அது, அவை } சுட்டுப் பெயர்கள்
இவன், இவள், இவர், இது, இவை
உவன், உவள், உவர், உது, உவை

4. தான், தாம்—பொதுப் பெயர்கள்.

எனவே, தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், நு என்னும் எழுத்தை முதலாகக் கொண்ட கிளைப் பெயர்களும், வினைப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும், தான், தாம் என்னும் பொதுப் பெயர்களும் விளிவேற்றுமையை ஏலாதனவாம்.

(ii) விளியேற்கும்போது பெயர்ச்சொல் அடையும் மாறுதல்கள்

விளி வேற்றுமை ஏற்கும்போது பெயர்ச் சொல் இயல்பாயும் வரும். அன்றி ஈறு திரிதல், ஈறு மிகுதல், ஈறு குன்றல், ஈற்றயல் திரிதல் முதலிய மாறுதல் களையும் பெறும்.

(உ-ம்) நங்கை! வருக—இயல்பாய் வந்தது.

அன்னாய்! எழுக—அன்னை என்பதன் ஈறு திரிந்தது.

நண்ப! உண்பாய்—நண்பன் என்பதன் ஈறு குன்றியது.

அரசனே! காண்க—அரசன் என்பதன் ஈறு மிகுந்தது.

அடிகேள்—மருந்து உரைமின்—அடிகள் என்பதன் ஈற்றயல் திரிந்தது.

(iii) ஆகுபெயர்

ஒரு பொருளின் பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டுப் பெயராகி வருவது ஆகுபெயர் என்று முன் படிவத்தில் படித்தோம். பொருள் முதலாகிய ஆறு ஆகுபெயர்களைக் கண்டோம். வேறு சிலவகை ஆகுபெயர்களை ஈண்டு நோக்குவோம்.

ஆகுபெயர் ஒரு சொல்லில் ஏற்படக் கூடியது. அது உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் காணப்படும். தொன்றுதொட்டு வருவது.

1. அளவை யாகுபெயர்கள் :

(i) "இக் காளையின் விலை என்ன ?" என்னும் வினாவிற்கு விடையாக **125** என்றால், அந்த எண் 125 ரூபாய்களைக் குறிக்கும் என்பது அறிவீர்கள். இங்ஙனம் ஓர் எண் அந்த அளவுள்ள வேறு பொருளைக் குறிப்பது எண்ணல் அளவை யாகுபெயர்.

(ii) கடைக்குப் போய் ஒரு வீசை வாங்கிவா— என்று சொல்லும்பொழுது வீசை என்பது சொல்லுவான் குறிப்பால் நிறுக்கப்படும் பொருளை உணர்த்துவதால் அது நிறுத்தல் அளவை யாகு பெயராம்.

(iii) உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்— இதனுள் நாழி என்பது நாழி அளவு தானியத்தைக் குறிப்பதால் அது முகத்தல் அளவை யாகுபெயராம்.

(iv) நான்கு முழம் என்பது நான்கு முழம் அளவுள்ள துணியைக் குறிப்பதால் அது நீட்டல் அளவையாகுபெயராம்.

எனவே, அளவை யாகுபெயர், எண்ணல் நிறுத்தல் (எடுத்தல்), முகத்தல்,. நீட்டல் என நான்கு வகைப்படும்.

2. கருவி யாகுபெயர் :

திருக்குறள் கற்றான்.
திருவாசகம் ஓதினான்.

இவ் வுதாரணங்களை நோக்குக. நூலை ஆக்குவதற்குக் கருவியாயிருந்த குறள் வெண்பாவின் பெயரும், வாசகத்தின் (சொற்கள்) பெயரும் அவற்றால் ஆக்கப்பட்ட நூலையே குறிக்கின்றன. ஆதலால் இவை கருவி யாகுபெயராகும்.

3. கருத்தா வாகுபெயர் :

திருவள்ளுவர் படித்தான்—திருவள்ளுவர் என்ற கருத்தாவின் பெயர் அவரால் இயற்றப்பட்ட திருக்குறள் என்ற நூலுக்கு ஆகிவந்தமையால் இது கருத்தா வாகுபெயராம்.

4. காரிய வாகுபெயர் :

யாப்பு உணர்ந்தான்
அணி பயின்றான்.

இவற்றுள் யாப்பு என்பது செய்யுளிலக்கணத்தையும், அணி என்பது அணியிலக்கணத்தையும்

குறிக்கும். செய்யுளும் அணியும் காரியங்கள். அவற்றைச் செய்யக் காரணமாகி உதவுவன அவ் விலக்கணங்கள். காரியத்தின் பெயர் காரணத்திற்கு ஆகி வந்ததால் இது காரிய வாகுபெயர் ஆகும்.

5. தானி யாகுபெயர் :

விளக்கு ஒடிந்தது.
கழல் பணிந்தான்.

விளக்கு என்பது சுடரைக் குறிக்கும். அச் சுடர் ஒடியவில்லை. சுடர் இருப்பதற்குத் தான மாகிய (இடம்) விளக்குத் தண்டு ஒடிந்தது என்பது பொருள். தானம் என்பது இடம் தானி என்பது இடத்திலுள்ள பொருளாகும். விளக்கு என்னும் தானியின் பெயர், அது இருக்கும் இடத் தைக் குறித்ததால் இது தானியாகு பெயர்.

இங்ஙனமே கழல் என்னும் காலணியின் பெயர், அது இருக்கும் இடத்தைக் குறித்தது. ஆதலால் அதுவும் தானியாகு பெயர் என்பது விளங்கும்.

6. சொல்லாகுபெயர்

இந்நூலுக்கு உரை செய்தான்,

இங்கு உரை என்னும் சொல்லின் பெயா அதன் பொருளுக்குப் பெயராகி வந்தது. ஆதலால் அது சொல் லாகுபெயர்.

7. இருமடி மும்மடி யாகு பெயர்கள்:

கார் அறுத்தான்.

தோகை வந்தாள்.

இங்கே கார் என்பது கருமையின் பெயர். அது கருமையுடைய மேகத்துக்காகிப் பின் அம் மேகங்கள் இயங்கும் கார் காலத்திற்கு ஆகி மீண்டும் அக்கார் காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆயிற்று. இவ்வாறு மூன்று முறை ஆகி வருவது மும்முடி யாகுபெயர். இங்ஙனமே தோகை (மயிலின் வால்) என்பது அதனையுடைய மயிலுக்கு ஆகிப் பின் அம் மயிலைப் போன்ற பெண்ணைக் குறிக்கிறது. இங்ஙனம் இருமடங்கு ஆகி வந்ததால் இருமடி யாகுபெயராகும்.

பயிற்சி

1. மூவிடப் பெயர்களில் விளி ஏலாத பெயர்கள் யாவை?

2. படர்க்கையில் எவ்வெப் பெயர்கள் விளி ஏலா?

3. விளி ஏற்கும்போது பெயர்ச் சொற்கள் அடையும் மாறுதல்கள் யாவை?

4. கருவியாகு பெயர் நால்வகை அளவை யாகுபெயர் இவற்றிற்கு உதாரணம் தருக.

5. இருமடி யாகுபெயர், மும்மடி யாகுபெயர், என்றால் என்ன? உதாரணம் தருக.

2. வினைச்சொல்.

(i) செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று :

(உ-ம்) அவன் உண்ணும்
அவள் உண்ணும்
அது உண்ணும்
அவை உண்ணும்;

இவ்வாக்கியங்களில் வந்துள்ள உண்ணும் என்ற வினைச் சொல்லை நோக்குக. அது 'உம்' ஈற்றால் முடிகிறது அல்லவா? இங்ஙனம் உம் மீற்றால் முடியும் வினை 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று எனப்படும். இம்முற்று மேற்காட்டிய வாறு ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின் பால் என்ற நான்கு பால்களில் மட்டும் வரும்.

(உ-ம்) அவர் உண்ணும்
நான் உண்ணும்
நீ உண்ணும்

இவ்வாறு வருவது இலக்கண முறைக்கு மாறு பட்டதாகும்.

செய்யும் என்னும் வினைமுற்று படர்க்கைப் பலர் பாலிலும், முன்னிலையிலும், தன்மையிலும் வாராது. ஒழிந்த நான்கு பால்களில் மட்டுமே வரும்.

இவ்வினைச்சொல் இக்காலத்திற் பெரும்பாலும் எதிர்காலமே உணர்த்திவரும். ஆனால் பழந்தமிழில் அது நிகழ்காலத்தை உணர்த்தி நின்றது.

(உ-ம்) மலை நிற்கும் (நிற்கிறது)
ஆறு ஓடும் (ஓடுகிறது)

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமும் உண்டு. அதனை இதனினும் வேருக உணர்க.

(உ-ம்) ஓடும் குதிரை
நிற்கும் புகழ் எனவரும்

முக்காலத்தும் ஒத்தியல் பொருள்களுக்குரிய வினைகளைச் செய்யும் என்னும் வினைமுற்ருல் கூறுதலுண்டு,

(உ-ம்) மலை நிற்கும்
ஆறு ஓடும்
தீ எரியும்
காற்று வீசும்

(ii) பொது வினைகள்.

வியங்கோள் வினைமுற்றுக்கள், வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்புவினைமுற்றுக்கள், வினையெச்சங்கள், பெயரெச்சங்கள் ஆகிய இவ் வினைச் சொற்கள் ஐம்பாலிலும் மூவிடத்திலும் வரும்.

நான்	வாழ்க	வாழிய	வாழியர்	வேறு	இல்லை	உண்டு
நாம்	,,	,,	,,	,,	,,	,,
நீ	,,	,,	,,	,,	,,	,,
நீர்	,,	,,	,,	,,	,,	,,
அவன்	,,	,,	,,	,,	,,	,,
அவள்	,,	,,	,,	,,	,,	,,
அவர்	,,	,,	,,	,,	,,	,,
அது	,,	,,	,,	,,	,,	,,
அவை	,,	,,	,,	,,	,,	,,

பெயரெச்சம்	வினையெச்சம்
உண்ட நான் மகிழ்ந்தேன்.	நான் உண்டு வந்தேன்.
உண்ட நாம் மகிழ்ந்தோம்.	நாம் உண்டு வந்தோம்.
உண்ட நீ மகிழ்ந்தாய்.	நீ உண்டு வந்தாய்.
உண்ட நீர் மகிழ்ந்தீர்.	நீர் உண்டு வந்தீர்.
உண்ட அவன் மகிழ்ந்தான்.	அவன் உண்டு வந்தான்.
உண்ட அவள் மகிழ்ந்தாள்.	அவள் உண்டு வந்தாள்.
உண்ட அவர் மகிழ்ந்தார்.	அவர் உண்டு வந்தார்.
உண்ட அது மகிழ்ந்தது.	அது உண்டு வந்தது.
உண்ட அவை மகிழ்ந்தன.	அவை உண்டு வந்தன.

இவ்வுதாரணங்களால் மேற்கண்ட செய்தி நன்கு விளங்குவது அறிக.

இவை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவா யிருப்பதால் இவற்றை பொதுவினைகள் என்பர்.

(iii) எச்சத் திரிபு:

இராமன் ஞாயிறு பட்டு வந்தான்.

இவ் வாக்கியத்தில் பட்டு என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அது, வந்தான்

என்ற வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. செய்து என்னும் வினைமுற்று எப்போதும் தன் வினைமுதல் வினையையே (கருத்தாவுக்குரிய வினை) கொண்டு முடியவேண்டும். ஞாயிற்றின் வினையாகிய பட்டு என்பது இராமனின் வினையாகிய வந்தான் என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்தது. இங்ஙனம் முடிவது தவருகும். எனவே, செய்து என்பதைச் செய எனத் திரித்துப் பொருள் கூறுவர். செய என்னும் வினையெச்சம் வினை முதல் வினையையும் கொண்டு முடியலாம் என்ற விதிக்கு ஏற்ப நிற்பதும் காண்க.

செய்து என்னும் வாய்பாட்டு வினைமுற்றைச் செய என்னும் வாய்பாட்டு வினைமுற்ருகத் திரித்துப் பொருள் கொள்ளுதற்குரிய இடங்களும் உள்ளன என அறிக. இது அருகியே வரும். வேறு சில உதாரணங்களையும் கீழே காண்க.

கொசு கடித்துக் கால் வீங்கிற்று. (கடிக்க)
மழை பெய்து குளம் நிறைந்தது. (பெய்ய)
மருந்து கொடுத்து நோய் நீங்கிற்று. (கொடுக்க)
மாடு மேய்ந்து பயிர் அழிந்தது. (மேய)

(iv) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள்:

பேசுவோன் தன்னை மட்டும் குறிப்பது தனித் தன்மை. அவன் முன்னிலையாரையோ, படர்க்கையாரையோ, ஈரிடத்துள்ளாரையோ தன்னேடு

உளப்படுத்தி யாம், நாம் எனக் கூறுவது உண்டு. அது உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகும்.

உ-ம். யான் வருவேன். (தன்மை ஒருமை)

யானும் நீயும் சென்றனம் யானும் நீயும் சென்றாம்	தன்மையும் முன்னிலையும் கூடிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

இங்ஙனம் முன்னிலையோடு கூடிய தன்மைப் பன்மைக்கு அம், ஆம் என்ற விகுதிகளைப் பெற்ற வினைமுற்றுக்களே வரும்.

யானும் அவனும் உண்டனெம் யானும் அவனும் உண்டேம் யானும் அவனும் உண்டோம்	தன்மையும் படர்க்கையும் கூடிய தன்மைப் பன்மை

இங்ஙனம் படர்க்கையோடு கூடிய தன்மைப் பன்மைக்கு எம், ஏம், ஓம் என்ற விகுதிகளைப் பெற்ற வினைமுற்றுக்களே வரும்.

யானும் நீயும் அவனும் உண்கும் யானும் நீயும் அவனும் உண்டும் யானும் நீயும் அவனும் உண்ணுதும் யானும் நீயும் அவனும் சேறும்	தன்மையோடு முன்னிலையும் படர்க்கையும் கூடிய தன்மைப் பன்மை.

இங்ஙனம் முன்னிலையோடும் படர்க்கையோடும் கூடிய தன்மைப் பன்மைக்கு கும், டும், தும், றும் என்ற விகுதிகளைக் கொண்ட வினை முற்றுக்களே வரும்.

ஆகவே, அம், ஆம் என்ற விகுதிகள் முன்னிலையாரையும், எம், ஏம், ஓம் என்ற விகுதிகள் படர்க்கையாரையும், கும், டும், தும், றும் என்ற விகுதிகள்

ஈரிடத்தாரையும் தன்னேடு உளப்படுத்திக்கூறும் தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகளாகும்.

பயிற்சி

1. செய்யும் என்னும் வினைமுற்று எங்கெங்கு வரும்?
2. செய்யும் என்னும் வினைமுற்று எக்காலங்களைக் காட்டும்? உதாரணம் தருக.
3. இருதிணை ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுவான வினைகள் யாவை?
4. தன்மைப் பன்மை எப்படி உண்டாக்கப் பெறும்?
5. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை? அவை உளப்படுத்தி நிற்கும் முறை யாது?

---

3. இடைச்சொற்கள்

முன் படிவத்தில் ஏகாரம், ஓகாரம், மற்று, தான் என்ற இடைச்சொற்களை நோக்கினேம். இப்போது வேறு சில இடைச் சொற்களை நோக்குவோம்.

பயிற்சி

1 மன் என்னும் இடைச்சொல்:

மன் என்பது ஓரிடைச் சொல்லாகும். அது கீழ்க் காட்டியவாறு பல பொருள்களில் வரும்.

(i) காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னே — இவ்வடியில் மன் என்னும் இடைச்சொல் ஒரு பொருளும் தாராது நின்றது. ஆதலால், அது அசைநிலைப் பொருளில் வந்தது.

(ii) காண்க மன் கொண்கனைக் கண்ணுர—இவ் வடியில் மன் என்பது கணவனைக் காண வேண்டும் என்னும் பொருள்பட நின்றது. ஆதலால் அது ஒழியிசைப் பொருளில் வந்தது.

(iii) எம் இறைவன் எமக்கு அருளுமன்—இவ் வடியில் மன் என்னும் இடைச்சொல் மிகுதி யாகத் தருவன் என்னும் பொருள்பட நின்றது. ஆதலால் இது மிகுதிப் பொருளில் வந்தது.

(iv) மன்னு உலகத்து மன்னியது குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே—இவ் வடிகளில் மன் என்னும் இடைச்சொல் நிலைபெறுதல் என்னும் பொருளில் வந்தது.

(v) போர்க்குப் புணைமன்; புரையோர்க்குத் தாணுமன்—இவ்வடியில் "போருக்குப் புணை யாகியும் பெரியோர்க்கு உற்ற பற்றுக் கோடாகியும் இருந்த பெருவள்ளல் இன்று இல்லையே!" என்று இரங்கிக் கூறியதால் மன் கழிவுப்பொருட்கண் வந்தது

(vi) பண்டு காடுமன்—இவ்வடியில் மன் என்னும் இடைச்சொல் 'பண்டு காடாயிருந்தவிடம்' இன்று வயலாயிற்று' என்னும் பொருள் தருவதால் அது ஆக்கப் பொருளில் வந்தது.

எனவே, மன் என்னும் இடைச்சொல் அசை நிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலை பேறு முதலிய பொருள்களில் வரும்.

2 என என்னும் இடைச்சொல்

என என்பது ஓரிடைச் சொல். இது கீழ்க் குறித்தவாறு பல பொருள்களில் வரும்.

1. கொள்ளெனக் கொடுத்தான்—கொடுத்தான் என்னும் வினையொடு வந்தது.
2. துண்ணெனத் துளங்கினன்—குறிப்புப் பொருளில் வந்தது.
3. ஒல்லென ஒலித்தது—ஒலிக்குறிப்புப் பொருளில் வந்தது.
4. வெள்ளென வெளுத்தது — பண்புப் பொருளில் வந்தது.
5. நிலனென நீரெனத் தீயென—எண்ணுப் பொருளில் வந்தது.
6. அழுக்காறு என ஒரு பாவி—பெயரொடு வந்தது.

எனவே, என என்னும் இடைச்சொல் வினை, குறிப்பு, இசை (ஒலி), பண்பு, எண், பெயர் என்ற ஆறு பொருளிலும் வருமென அறிக.

3 தில் என்னும் இடைச்சொல்

தில் என்பது ஓரிடைச் சொல். அது கீழ்க் குறித்தவாறு பல பொருள்களில் வரும்:—

1. போரருந் தித்தன் காண்கதில் அம்ம—இதனுள் தில் என்பது 'தித்தன் காண்டலை யான் விரும்புவன்; என்னும் பொருட் கண் வந்திருப்பதால், அது விழைவுப் பொருளைக் குறித்தது.

2. பெற்ருங்கு அறிகதில் அம்ம இவ்வூரே— இது ' பெற்ற காலத்தில் அறிக ' என்னும் பொருளேத் தருதலின், காலத்தை உணர்த்தி நின்றது.

3. வருகதில் அம்ம எஞ்சேரி சேர — இதனுள் ' வந்தால் இன்னது செய்வேன் ' என்ற ஒழிந்த செய்தியைத் தெரிவித்தலின், தில் ஒழியிசைப் பொருளில் வந்தது.

எனவே, தில் என்னும் இடைச்சொல் விழைவு, காலம், ஒழியிசை என்ற மூன்று பொருள்களில் வரும் என அறிக.

4 ' அம்ம ' என்னும் இடைச்சொல்

'அம்ம' என்பது ஓரிடைச்சொல். அது பின் வருமாறு பலபொருள்களில் வரும்.

1. வருக மற்றம்ம—இதனுள் அம்ம என்னும் இடைச்சொல் தனக்கென ஒரு பொருளும் இன்றி உரையாடலில் அசைத்து நிற்றலால், உரையசையாயிற்று.

2. அம்ம வாழி தோழி—'தோழி, ஒன்று சொல்கிறேன், கேள்' என்று அம்ம என்பது 'கேள்' என்னும் பொருளில் வந்தது.

எனவே, அம்ம என்னும் இடைச்சொல் உரையசையாகவும், கேண்மின் என்ற ஏவலாகவும் வரும்.

5 மோ, மதி என்னும் இடைச் சொற்கள்

1. காமம் செப்பாது கண்டது மொழிமோ!
2. 'உண்மதி நண்ப'

இவற்றுள் மோ என்னும் இடைச்சொல்லும் மதி என்னும் இடைச்சொல்லும் முன்னிலைப் பொருட்கண் அசை நிலையாய் வந்தவாறு காண்க.

எனவே மோ, மதி இரண்டும் முன்னிலை யசை நிலைகளாக வரும் என அறிக.

6 மாது, போலும், ஆம், தான், தாம் என்னும் இடைச்சொற்கள்

1. இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ
2. மங்கலம் என்பதோர் ஊருண்டு போலும்
3. பணியுமாம் என்றும் பெருமை
4. நீதான், நான்தான், அவன்தான்
5. நாம்தாம், நீர்தாம், அவர்தாம்.

இவ்விடைச் சொற்கள் ஐந்தும் மூன்றிடங்களிலும் அசை நிலைப் பொருளில் வந்துள்ளமை காண்க.

எனவே மாது, போலும், ஆம், தான், தாம் என்னும் இடைச் சொற்கள் மூன்றிடங்களிலும் அசைச் சொற்களாக வரும்.

பயிற்சி

1. மன் என்னும் இடைச் சொல் எப்பொருள்களில் வரும்?
2. என என்னும் இடைச் சொல்லை உபயோகிக்கும் ஆறு இடங்கள் யாவை?
3. தில் என்னும் இடைச்சொல் எவ்வெப் பொருளில் வரும்?
4. அம்ம என்பது எவ்வெப் பொருளில் வரும்?
5. முன்னிலைக்கண் அசைச் சொற்கள் யாவை? உதாரணத்தோடு எழுதுக.
6. மூவிடத்திற்கும் பொதுவான இடைச்சொற்கள் யாவை? உதாரணத்தோடு எழுதுக.

4. உரிச்சொல்

முன் படிவத்தில் உரிச்சொற்களின் இலக்கணத்தையும், ஒரேபொருளில் வரும் பல உரிச்சொற்களில் சிலவற்றையும், பல பொருளில் வரும் கடி என்னும் உரிச்சொல்லையும் கற்றுணர்ந்தோம். இப்பொழுது வேறு சில உரிச்சொற்களைப் பயில்வோம்:

(i) கெழு வென்னும் உரிச்சொல்

1. செங் கேழ் மென்கொடி.
2. கேழ் வரகு.
3. கேழ் கிளர் பாதம்.

இவ் வுதாரணங்களில் கேழ் என்பது நிறம் என்னும் பொருளில் வந்துள்ளது.

எனவே, கேழ் என்பது நிறங்குறித்து வரும் உரிச்சொல்.

(ii) மல்லல் என்னும் உரிச்சொல் :

1. மல்லல் மா ஞாலம்.
2 மல்லல் பேரியாறு.
3. மல்லல் அந் தொடையல்.

இவ் வுதாரணங்களில் மல்லல் என்பது 'வளம் பொருந்திய' என்ற பொருளைக் குறித்து நின்றது காண்க.

எனவே, மல்லல் என்னும் உரிச்சொல் வளப்பம் என்ற பொருளில் வரும் என அறிக,

மல்லல் வளனே (தொல்காப்பியம்)]

(iii) கூர், கழி என்னும் உரிச்சொற்கள் :

1. துனி கூர் எவ்வம்.
2. களி கூர் மனம்.
3. கழி கண்ணோட்டம்.
4. கழி பேருவகை.

இவ் வுதாரணங்களில் உள்ள கூர், கழி என்னும் உரிச்சொற்கள் உள்ளது மிகுந்தது என்ற பொருளில் வந்துள்ளமை காண்க.

எனவே, கூரும் கழியும் உள்ளது சிறத்தல் என்ற பொருளில் வரும் என அறிக.

(iv) தட வென்னும் உரிச்சொல் :

1. வலிதுஞ்சு தடக்கை (பெரிய கை)
2. தடந்தோள் வீர (பெரிய தோள்)

இவ் வுதாரணங்களில் தட என்னும் உரிச் சொல் பெரிய என்ற பொருளில் வந்துள்ளமை காண்க.

1. தட மருப்பு யானை
2. தடந்தாள் நாரை

இவ் வுதாரணங்களில் தட என்னும் உரிச் சொல் 'வளைந்த' என்ற பொருளில் வந்துள்ளமை காண்க.

எனவே, தடவென்னும் உரிச்சொல் பெருமை, வளைவு முதலிய பொருள்களைக் குறித்து வரும்,

(v) வை என்னும் உரிச்சொல் :

1. வைந் நுனைப் பகழி
2. வை வாள் உழந்த மணிப்பூண் அகலத்து எம் ஐயாவோ !

இவ் வுதாரணங்களில் 'வை' என்னும் உரிச் சொல் கூர்மை என்ற பொருளில் வந்துள்ளமை காண்க.

எனவே, வை என்னும் உரிச்சொல் கூர்மை என்ற பொருளில் வரும்.

வையே கூர்மை (தொல் காப்பியம்)

பயிற்சி

1. உரிச் சொல்லின் இலக்கணம் என்ன ?
2. கெழு கூர் தட என்னும் உரிச்சொற்கள் எவ்வெப் பொருளில் வரும் ?
3. i வைந்நுதி வேல்.
4. ii. எவ்வங்கூர் மாலே.

   iii. கழி பெருங்காதல்.

   iv. தட மலர்த் தண் தாழை.

   v. மல்லல் ஊர்,

இவ் வுதாரணங்களில் வந்துள்ள உரிச் சொற்களைக் குறிக்க. அவை எவ் வெப் பொருளில் வந்துள்ளன என்பதையும் எழுதுக.

III பொது

1. தொகையில் பொருள் சிறந்து நிற்கும் இடம்

தொகைநிலைத் தொடர்கள் வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும் என முன்னமே படித்திருக் கின்றீர்கள் அல்லவா? இரண்டு சொற்கள் தம்முள் இணைந்து ஒரு தொடராகி வழங்குவன தொகைநிலைத் தொடர்களாகும். அங்ஙனம் அவை தொக்கு நிற்கும் போது அத் தொடரின் முன் மொழியிலோ அன்றிப் பின் மொழியிலோ பொருள் சிறந்து நிற்கும். சாரைப்பாம்பு என்ற பண்புத்தொகைநிலைத் தொடரில் சாரை என்னும் முன் மொழி யில்லாவிடின் பொருள் தெளிவடையாது; ஆதலால், அத் தொகையின் முன் மொழியில் பொருள் சிறந்து நின்றது. கண்ணிமை என்ற தொடரில் 'இமை' என்றபோது விளங்கும் பொருள், கண் என்றபோது விளங்குவதில்லை. எனவே, அதன்கண் பின்மொழியில் பொருள் சிறந்து நின்றது. இவ்வாறே ஆறு தொகைகளையும் இயைத்துக் காண்போம்.

நூல் எழுதினன். குடம் வனைந்தான்	இவ் வேற்றுமைத் தொகைகளில் எழுதினன், வனைந்தான் என்ற வினை களைக் கூறியவுடன் எவற்றை என்ற ஐயம் எறபடும் அன்றோ? அதனைப்

	போக்கித் தெளிவுபடுத்துவன நூல், குடம் என்ற சொற்களே யாகும். எனவே, இத் தொகை நிலைத் தொடரில் பொருள் முன் மொழியிற் சிறந்து நின்றது என அறிக.
நிலம் உழுதான் கண் இமை	இவ் வேற்றுமைத் தொகைக்கண், உழுதான், இமை என்ற மாத்திரத்தில் நிலம், கண் என்னும் சொற்கள் தாமே ஊகித்தறியப்படும். ஆதலால் இத் தொகைநிலைத் தொடரில் பொருள் பின்மொழியிற் சிறந்து நிற்றல் காண்க.
வெண்டாமரை வெந்நீர்	இப் பண்புத் தொகைநிலைத் தொடரில் தாமரை, நீர் என்ற பெயர்ச் சொற்களைக் கூறியவுடன் எவ்வகைத் தாமரை, எவ்வகை நீர் என்ற ஐயம் தோன்றும். அதனைப் போக்கி விளக்குவன வெண்மை, வெம்மை என்ற சொற்கள். எனவே இத் தொகையின் முன் மொழியில் பொருள் சிறந்து நிற்றல் காண்க.

குறிப்பு:— செஞ்ஞாயிறு என்னும் தொகை நிலைத் தொடரில் பொருள் பின்மொழியில சிறந்து நிற்றல் காண்க.

இராப்பகல் கபில பரணர்	இவ்வும்மைத் தொகைத் தொடரில் எல்லா மொழியிலும் பொருள் சிறந்து நிற்றல் காண்க.

சுடுதீ
ஆழ்கடல் } இவ்வினைத்தொகைத் தொடரில் தீ, கடல் என்ற மாத்திரத்தில் சுடுதலும, ஆழமும் பெறப் படும் ஆதலால இததொகைநிலைத்தொட ரில் பின் மொழியிற் பொருள் சிறந்து நின்றது

கயற் கண்
பவளவிதழ் } இவ்வுவமைத் தொகைநிலைத் தொடரில் கயல் பவளம் என்றவற்றில் பொருள் சிறவாமல், கண், இதழ் என்றவற்றில பொருள் சிறந்து நிற்றல் காண்க. விளக்க வந்தவை கண்ணும் இதழுமே ஆதலால்.

பொற்றொடி வந்தாள்
ஆயிழை உரைக்கும் } இவ்வன்மொழித்தொகைநிலைத்தொட ரில் பொன்னலாகிய வளையல் என்ப தன் கண்ணும், ஆராய்ந்த ஆபரணங் கள் என்பதன் கண்ணும பொருள் சிறந்து நில்லாமல் 'அவற்றை யணிந்தமங்கை' என்ற புறமொழியில் பொருள் சிறந்து நிற்றல் காண்க.

எனவே, தொகைநிலைத் தொடர்கள், முன் மொழியிலும், பின் மொழியிலும், பன்மொழி யிலும், புறமொழியிலும், பொருள் சிறந்து நிற் கும் என வறிக.

2. மரபு

யானை மேய்ப்பவனைப் பாகன் எனவும், ஆடு மேய்ப்பவனை இடையன் எனவும், வாழையின் இலையை வாழையிலை எனவும், பனையின் ஓலையை பனையோலை எனவும், வழங்குவதே மரபு. இவற்றை விடுத்து யானை இடையன் எனவும், ஆட்டுப்பாகன்

எனவும், வாழையோலை எனவும். பனையிலை எனவும் வழங்குதல் கூடாது. அவை மரபு வழுவாம்.

எனவே, சான்றோர்கள் எப்பொருளை எச் சொல்லால் எம்முறையில் வழங்கினரோ அப் பொருளை அச்சொல்லால் அம்முறையில் வழங்கு வதே மரபு எனப்படும்,

உணவுப் பொருள்கள் உண்பன, தின்பன. பருகுவன, நக்குவன என நால்வகைப்படும். அவ்வ வற்றுக்குரிய சிறப்புச் சொற்களைக் கொண்டே அவை வழங்கப்படல் வேண்டும்.

(உ–ம்) சோறு உண்டான்
கறி தின்றான்
நீர் பருகினான்
கூழைக் குடித்தான்

இங்ஙனமே போர்க் கருவிகளும் எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன எனப் பலவகைப் படும். அவற்றையும் மரபு வழுவாமல் வழங்க வேண்டும்.

(உ–ம்) அம்பு எய்தான்
வேல் எறிந்தான்
வாளால் வெட்டினான்
ஈட்டியால் குத்தினான்

இத்துணை என்று வரையறுத்து அறியப்பட்ட பொருள்களைக் கூறும்போது உம்மை கொடுத்து

வழங்குதல் வேண்டும் என்பது மரபு. அதனையும் தவருது வழங்கல் வேண்டும்.

(உ-ம்) தமிழ் நாட்டு வேந்தர் மூவ நம் வந்தார்.
பாண்டவர் ஐவரும் வென்றனர்.
எனக்குரிய பணம் நாற்ப நும் கொடுப்பாயாக.

இங்ஙனம் மரபுபற்றி வருவன பலவுள, அவற்றை வழக்கும் செய்யுளும் நோக்கி அறிக.

3. வழுவமைதிகள்

முன் படிவத்தில் திணை, பால், இட வழுவமைதி களை நோக்கினேம். இங்கு வேறு சிலவற்றைக் காண்போம்.

(1) காலவழுவமைதி

(i) ஒருவன் உணவை உண்ணு நின்ருன். அவனை மற்றொருவன் அழைத்தான். அப்போது அவன் "வந்துவிட்டேன்" என்று விடையிறுத் தான். இன்னும் உணவை உண்ணுந் தொழில் முடிவுருதிருக்க, அவன் வந்துவிட்டேன் என்றது வழுவேயாகும். 'வருவேன்' என்று சொல்லவேண்டி யதை 'வந்தேன்' என இறந்த காலத்தால் கூறுவ தற்குக் காரணம் விரைந்து வருதலாகிய செயலாகும். இங்ஙனம் விரைவைக் காட்ட வந்ததால் இது கால வழுவமைதி யாகும்.

விரைவு பற்றி எதிர்காலத்திற்கு இறந்த காலம் வழுவி வரும். அது கால வழுவமைதி யாகும்

(ii) நீ இக் காட்டிடைச் சென்றுயேல் செத்தாய்.—என ஒருவன் மற்றெருருவனை நோக்கிக் கூறினுன். இங்கு, சாவாய் என்று எதிர்காலம் கூறவேண்டும்! ஆனுல், சாதல் நிச்சயம் (தெளிவு) என்பது காட்ட இறந்த காலத்தாற் கூறினுன். இது தெளிவு பற்றி வந்த கால வழுவமைதியாகும்.

(iii) "நாங்கள் இளமையில் இங்குதான் விளையாடுவோம்" என்று ஒருவன் கூறினுன். இங்கு 'விளையாடினேம்' என இறந்த காலத்தாற் கூற வேண்டியதை உலக வழக்குப்பற்றி இயல்பினுல் எதிர்காலத்தாற் கூறினுன். இது இயல்பு பற்றி வந்த கால வழுவமைதி யாகும்.

(iv) மலை நிற்கிறது; தெய்வம் இருக்கிறது— மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும் முக்காலத்திலும் மாருது உள்ள செயல்களாகும். இங்ஙனம் முக்காலத்தும் ஒத்தியல் பொருள்களை நிகழ்காலத்தாலேயே கூறுவர். இது கால வழுவ மைதி யெனப்படும்.

எனவே, விரைவு பற்றியும், மிகுதி பற்றியும், தெளிவு பற்றியும், இயல்பு பற்றியும் காலம் பிறழ்ந்து வரும். அவை கால வழுவமைதியாம்.

முக்காலத்தும் ஒத்தியல் பொருளை நிகழுங் காலத்தாற் செப்புவர். அதுவும் கால வழுவ மைதியாம்.

(2) மரபு வழுவமைதி

இப்பசு யான் கொண்டது.

இப் புத்தகம் யான் வாங்கியது.

இப்பசு என்னால் கொள்ளப்பட்டது என்றும், இப்புத்தகம் என்னால் வாங்கப்பட்டது என்றும், செயப்பாட்டு வினையாக இருக்க வேண்டிய வினை முற்றுக்கள் செய் வினைகளாக அமைத்துக் கூறப் பட்டன.

இங்ஙனம் செயப்படு பொருளைச் செய்வது போலக் கூறுதலும் உண்டு. இது மரபு வழுவமைதி யாகும்.

நெஞ்சம் கடுத்தது முகம் காட்டும்.
இவ்வழி தஞ்சைக்குச் செல்லும்.
நெஞ்சே! நீ வாழி.
பகைமையும் நட்பும் கண் உரைக்கும்.

இவ்வாறு அஃறிணைப் பொருள்களைக் கேட்பன போலவும், சொல்வன போலவும், நடப்பன போலவும், செய்வனபோலவும் குறிப்பிட்டுக் கூறுவது மரபு வழுவமைதிகளாம்.

4. ஒருபொருட் பன்மொழி—இரட்டைக் கிளவி—அடுக்குத் தொடர்

1. ஒருபொருட் பன்மொழி:

(1) ஓங்கு உயர் மலயத்து உச்சி மீ மிசை.
(மீ மிசை-மேலே)

(2) மாபெரும் புகழ் (மா-பெரிய)

(3) நாகிளங் கமுகு (நாகு-இளமை)

(4) புனிற்றிளங்கன்று (புனிறு-இளமை)

இவற்றுள் ஒரே பொருளைக் குறிக்கும் இரண்டு சொற்கள் சேர்ந்து வருதல் காண்க. சிறப்புடைமையைக் காட்ட வந்தன. எனவே, அவை வழுவாகா. மிகுதி காட்டி நின்றமையின் வழுவமைதிகளாம். இவற்றை ஒருபொருட் பன் மொழி என்பர். மீமிசைச் சொல் எனவும் கூறப்படும்.

2. இரட்டைக் கிளவி:

(i) குறுகுறு நடந்து சிறுகை நீட்டி.

(ii) வற்றிய ஓலை கலகலக்கும்.

(iii) மழை சளசள எனப் பொழிந்தது.

(iv) நீர் குளுகுளு எனக்கொதித்தது.

(v) மரம் மடமட என முறிந்தது.

இவற்றுள் குறுகுறு, கலகல, சளசள, குளுகுளு, மடமட என்ற சொற்களைப் பிரித்துக் குறு, கல, சள, குளு, மட என வழங்கினால் அவை பொருளற்ற சொற்களாய்விடும். இவை இலையிரட்டை போலவும், காயிரட்டை போலவும் இரட்டையாய் இணைந்தே நிற்கும் சொற்களாம். எனவே, இவற்றைக் இரட்டைக் கிளவிகள் என்பர் (கிளவி-சொல்). இவை பிரிந்திசையா.

3. அடுக்குத் தொடர்:

(i) நன்று நன்று! நீயே சமர்த்தி.
(ii) சரிசரி போ.
} வெகுளிப் பொருளைக் காட்டின.

(iii) ஓடு ஓடு ஓடு
(iv) நில் நில்
} விரைவுப் பொருளைக் காட்டின.

(v) தீ தீ தீ		அச்சப் பொருளைக் காட்டின.
(vi) பாம்பு பாம்பு பாம்பு		
(vii) இனி யான் வாழேன் வாழேன்!		அவலப் பொருளைக் காட்டின.
(viii) ஆதரித்த அரசனும் இறந்தானே இறந்தானே!		

(ix) அன்றே அன்றே—அசை நிலையாய் நின்றன

(x) ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்—இசையை நிறைத்து நின்றன.

இங்ஙனம் வெகுளி, விரைவு, அச்சம், அவலம், அசை நிலை, இசைநிறை முதலிய பொருள்களைக் காட்ட ஒரு சொல்லே பலமுறை அடுக்கி வருதல் உண்டு. அப்போது அத்தொடரை அடுக்குத் தொடர் என்பர்.

அடுக்குத்தொடர் சாதாரணமாக இரண்டிரண்டாக அடுக்கிவரும். விரைவு அச்சம் முதலியவற்றைக் காட்ட மும்முறை அடுக்கிவரும். இசை நிறைக்க நான்கு முறை அடுக்கி வரும்.

இரட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாடுகளாவன:

இரட்டைக் கிளவி	அடுக்குத் தொடர்
1. இரட்டை இரட்டையாய் இணைந்தே வரும்	1 இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும்.
2. தொடரைப் பிரித்தால் பொருள் விளங்காது.	2 தொடரைப் பிரித்தாலும் பொருள் விளங்கும்.

5. உபலட்சணம் (இனஞ்சுட்டல்)

இலையின் முன் இருந்து 'சோறு போடு' என்றால் சொல்லுவோன் குறிப்பால் சோறு என்ற சொல் உண்பதற்குரிய கறி, குழம்பு முதலிய பல பொருள்களையும் குறித்து நிற்கக் காணலாம். இங்ஙனம் ஒரு சொல் நின்று தன் இனமான பிற பொருள்களையும் சுட்டுவது உபலட்சணம் எனப்படும்.

வாழ்க! அந்தணர் வானவர் ஆனினம்

என்ற விடத்து அந்தணர் என்ற சொல் பிற மக்களையும், ஆனினம் என்ற சொல் பிற விலங்கு களையும் குறித்து, அவரும் அவையும் வாழ்க என்று இனம் சுட்டிப் பொருள் காட்டியவாறு காண்க.

பயிற்சி

1 அன்மொழித் தொகை, உம்மைத் தொகை-இவற்றுள் பொருள் சிறந்து நிற்கும் இடங்கள் யாவை?

2. மரபு எனப்படுவது யாது?

3 கால வழுவமைதிக்கு ஓர் உதாரணம் தந்து விளக்குக.

4. மரபு வழுவமைதியை விள்க்கி உதாரணம் தருக.

5. ஒருபொருட் பன்மொழி, இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர்—இவற்றை விளக்குக

6. இரட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

IV. புணர்ச்சி

1. உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி

இரண்டு சொற்கள் சேரும்போது நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் இயல்பாகவும் விகாரப்பட்டும் தம்முள் சேருவது, புணர்ச்சி என்று நான்காம் படிவத்தில் படித்தோம்.

அச் சொற்கள் வேற்றுமைப் பொருளில் புணருமாயின் அவை வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். அவை வேற்றுமைப் பொருளில் புணராவிடின், அல்வழிப் புணர்ச்சி எனப்படும்.

இனி உயர்திணைப் பெயர்கள் வேற்றுமையிலும் அல்வழியிலும் புணரும் முறையை நோக்குவோம்.

ஊரன் + கரியன் ஊரன் + சிறியன் ஊரன் + தீயன் ஊரன் + பெரியன்	னகர ஈற்று உயர்திணைப் பெயர் அல்வழியில், வருமொழியில் வல்லெழுத்து வந்தவிடத்தும் இயல்பாகவே புணரும் என உணர்க.

தோன்றல் என்ற சொல்லோடு கரியன், சிறியன், பெரியன் என்ற சொற்களைக் கூட்டி, தோன்றல் கரியன், தோன்றல் சிறியன், தோன்றல் பெரியன் என்று இயல்பாக முடித்துக்கொள்க. அதைப் போலவே, வேள் என்ற ளகர ஈற்று உயர்திணைப் பெயரோடும் கரியன், சிறியன் பெரியன் என்ற சொற்களைக் கூட்டி இயல்பாக முடித்துக் கொள்க.

லகர ளகர ஈற்று உயர்திணைப் பெயர்முன் வருமொழியில் தகரம் வந்தால் திரியும் என்று உணர்க.

எனவே, னகர, லகர, ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் அல்வழிக்கண் இயல்பாக முடியும்.

ஊரன் + கை = ஊரன் கை

தோன்றல் + செவி = தோன்றல் செவி

வேள் + புயம் = வேள் புயம்.

என வேற்றுமைக்கண்ணும் னகர, லகர, ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் இயல்பாக முடியும்.

நம்பி + கரியன் = நம்பி கரியன் — இகர ஈற்று உயர்திணைப் பெயர் அல்வழிக்கண் இயல்பாகப் புணர்ந்தவாறு காண்க.

நம்பி + தலை = நம்பிதலை - இகர ஈற்று உயர்திணைப் பெயர் வேற்றுமைக் கண் இயல்பானவாறு காண்க.

விடலை + பெரியன் = விடலை பெரியன்—அல்வழிப் புணர்ச்சி

விடலை + தலை = விடலை தலை—வேற்றுமைப்புணர்ச்சி

ஐகார ஈற்று உயர்திணைப் பெயர் இருவழிக் கண்ணும் இயல்பாயினவாறு காண்க.

1. கபிலன் + பரணன் = கபிலபரணர்
2. வடுகன் + நாதன் = வடுகநாதன்
3. அரசன் + வள்ளல் = அரசவள்ளல்

4. வேளாளன் + பிள்ளை = வேளாண்பிள்ளை

5. பார்ப்பான் + கன்னி = பார்ப்பனக்கன்னி

6. ஆசீவகன் + பள்ளி = ஆசீவகப்பள்ளி

7. மக்கள் + பண்பு = மக்கட்பண்பு

8. குமரன் + கோட்டம் = குமரகோட்டம்
குமரக்கோட்டம்

மேற் கண்டவாறு உயர்திணைச் சொற்கள் பிற உயர்திணைச் சொற்களோடும் (ஒன்று முதல் ஐந்து உதாரணங்கள்) அஃறிணைச் சொற்களோடும் (ஆறு முதல் எட்டு முடிய) புணரும் போது ஏற்படும் மாறுபாடுகளை வழக்கும் செய்யுளும் நோக்கி அறிக. இவை சிறுபான்மை என்றுணர்க.

2. உயிரீற்றில் இயல்பாக நிற்பவை

(i) அகர ஈறு :

உண்ணிய + சென்றான் = உண்ணிய சென்றான்.

வந்த + பையன் = வந்த பையன்

உண்டன + குதிரைகள் = உண்டன குதிரைகள்

பல + குதிரைகள் = பல குதிரைகள்

அம்ம + தோழி = அம்மதோழி

வாழிய + கொற்றா = வாழிய கொற்றா

அகர ஈற்றில்—செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம், பெயரெச்சம், முற்றுவினை, அஃறிணைப் பன்மைப் பெயர், அம்ம என்னும் இடைச்சொல் வாழிய என்னும் வியங்கோள்வினை இவற்றின் பின் வல்லினம் இயல்பாயின.

(ii) ஆகார ஈறு :

ஆ + சிறியது = ஆசிறியது
மா + சிறியது = மாசிறியது
கேண்மியா + சாத்தா = கேண்மியா சாத்தா
உண்ணா + பசுக்கள் = உண்ணா பசுக்கள்

ஆகார ஈற்று அல்வழியில்—ஆ என்ற பெயரும், மா என்ற பெயரும், மியா என்ற முன்னிலை அசைச்சொல்லும், அஃறிணைப் பன்மை வினைமுற்றும் ஆகிய இவற்றின் முன் வரும் வல்லெழுத்து மிகாது இயல்பாக முடியுமாறு காண்க.

(iii) இகர ஈறு :

நாளன்றி + போகி = நாளன்றிப் போகி
உணவின்றி + சென்றான் = உணவின்றிச் சென்றான்

இவ்வாறு வல்லெழுத்து மிகும். அன்றி, இன்றி என்னும் வினையெச்சங்கள் செய்யுளில் அன்று, இன்று என உகர ஈறாய்த் திரியும். அவை

நாளன்று + போகி = நாளன்று போகி

உணவின்று + சென்றான் = உணவின்றுசென்றான் என இயல்பாக வரும்.

வாழி + கொற்றா = வாழிகொற்றா

இகர ஈற்று வியங்கோள் வினைமுற்று இயல்பாயினவாறு காண்க.

(iv) ஈகார ஈறு :

நீ + குறியை = நீ குறியை
நீ + சிறியை = நீ சிறியை

நீ என்ற ஈகார ஈற்றுச் சொல் அல்வழியில் இயல்பாய் வரும்.

(v) உகர ஈறு:

இராமனொடு + சென்றான் = இராமனொடு சென்றான்

சாத்தனது + புத்தகம் = சாத்தனது புத்தகம்

ஒரு + கை = ஒரு கை

அடு + களிறு = அடுகளிறு

அது + குறிது = அது குறிது

உகர ஈற்றில்-மூன்றும் வேற்றுமை உருபு, ஆறும் வேற்றுமை உருபு, எண்ணுப் பெயர், வினைத் தொகைகள், சுட்டுப் பெயர்கள் இவை இயல்பாகும்.

(vi) குற்றியலுகர ஈறு:

காடு + கடிது = காடு கடிது—நெடில் தொடர்

எஃகு + கடிது = எஃகு கடிது—ஆய்தத்தொடர்

வரகு + கடிது = வரகு கடிது—உயிர்த்தொடர்

பந்து + சிறிது = பந்து சிறிது—மென் தொடர்

தெள்கு + தீது = தெள்கு தீது—இடைத்தொடர்

அல்வழியில் குற்றியலுகர ஈற்றில் வன்றொடர்க் குற்றியலுகரம் நீங்கலாக, ஏனைய குற்றியலுகரங்கள் இயல்பாயினவாறு காண்க.

தெள்கு + கடுமை = தெள்கு கடுமை

எஃகு + கடுமை = எஃகு கடுமை

நாகு + தீமை = நாகு தீமை

முரசு + பெருமை = முரசு பெருமை

வேற்றுமையிலும் குற்றியலுகர ஈற்றில் இடைத் தொடர், ஆய்தத் தொடர், நெடிற் றொடருட் சில, உயிர்த் தொடருட் சில இயல்பாயினவாறு காண்க.

(vii) ஏகார ஓகார ஈறுகள்:

அவனே + கொன்றான் = அவனே கொன்றான்

அவனோ + தின்றான் = அவனோ தின்றான்

ஏகார ஓகார இடைச் சொற்களை ஏற்ற சொற்கள் வல்லினம் வர இயல்பாயின.

பயிற்சி

1. உயர்திணைப் பெயர்கள் எவ்வெவ் வுயிரீற்றிலும், புள்ளியீற்றிலும் வரும்? அவை இயல்பாகப் புணர்வதற்கு உதாரணம் தருக.

2. உயர்திணைப் பெயர்கள் உயர்திணைப் பெயரோடும் அஃறிணைப் பெயரோடும் சேரும்போது சில இடங்களில் விகாரப்படுகின்றன—விடைக்கு 4 உதாரணங்கள் தருக.

3. அகர ஈற்றுச் சொற்களில் இயல்பாக வருவன யாவை?

4. ஆகார ஈற்றுச்சொற்களில் எவை எவை இயல்பாகப் புணரும்?

5. குற்றியலுகரச் சொற்கள் அல்வழியிலும் வேற்றுமை யிலும் இயல்பாகப் புணருவதற்கு நந்நான்கு உதாரணம் தருக.

V. யாப்பு

1. சீர் பிரித்து வாய்பாடு கூறுதல்

நான்காம் படிவத்தில் அசைச்சீர் என்பன வற்றைப் பற்றி அறிந்தோம். இனி, சீர்பிரித்து வாய்பாடு கூறும்முறை முதலியவற்றை நோக்கு வோம்.

வாய்பாடு கூறும்போது, ஒரு சீரில் உள்ள எழுத்தை மறு சீரில் உள்ள எழுத்தோடு சேர்த்துக் கூறக்கூடாது.

எக்குலத்தாய் யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நேர்நிரைநேர் நேர்நிரைநேர் நேர்நேர்நேர் நேர் நேர் நேர்
கூவிளங்காய் கூவிளங்காய் தேமாங்காய் தேமாங்காய்
என்று பிரித்து வாய்பாடு கூறுக.

2. தளையின் பொது இலக்கணமும் வகையும்

நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதல் அசை ஒன்றுவது தளை எனப்படும்.

ஆசிரியத்தளை :

போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதர் சேர்வோர்
சோதி வானம் துன்னு வாரே

இப்பாடலில் வந்துள்ள எல்லாச் சீர்களும் தேமாச்சீர்களே யாகும். முதற்சீர் மாவில் முடிந்து வருஞ்சீர் நேரசையில் ஆரம்பிப்பதாலும் இவ்வகைச் சீர்கள் ஆசிரியப்பாவில் மிகுதியாக வருவதாலும் இவை நேர் ஒன்று ஆசிரியத்தளையாம்.

எனவே மாமுன் நேர் வருவது நேர் ஒன்று ஆசிரியத்தளை.

அணிநிழல் அசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிகழ் அவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே

இப்பாடலில் எல்லாச் சீர்களும் விளச் சீர்களேயாய் அமைந்துள்ளன. விளம்முன் நிரை வந்துள்ளமையும் காண்க. நின்ற சீர் விளச்சீரா யிருக்க, வரும் சீரின் முதல் அசை நிரையர்க வந்தால் அது நிரையொன்று ஆசிரியத் தளையாம். இவ்வகைத் தளை ஆசிரியப்பாவில் மிகுதியாய்ப் பயின்று வரும்.

எனவே மாமுன் நேர் வருவது நேரொன் ருசிரியத் தளை எனவும், விளம்முன் நிரை வருவது நிரையொன்று ஆசிரியத்தளை எனவும், கூறப்படும். இத் தளையும் ஆசிரியப்பாவிலேயே பயின்று வரும்.

வெண்டளை:

ஆசிரியத் தளை மாறி, மாமுன் நிரையும் விளம் முன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை.

பாலொடு	தேன்கலந்	தற்றே	பணிமொழி
நேர் நிரை	நேர் நிரை	நேர்நேர்	நிரை நிரை
கூவிளம்	கூவிளம்	தேமா	கருவிளம

வாலெயி	றூறிய	நீர்
நேர்நிரை	நேர்நிரை	நேர்
கூவிளம	கூவிளம	நாள்

இப்பாடலில் மாமுன் நிரையும், விளம் முன் நேரும் வந்து இயற்சீர் வெண்டளை அமைந்த வாறு காண்க.

காய்முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை எனப்படும்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

இப்பாடலில் நின்றசீர் காயாக முடிந்து, வருஞ்சீர் நேரில் தொடங்கி, வெண்சீர் வெண்டளை அமைந்தவாறு காண்க.

வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் அன்றி வேறு எந்தத் தளையும் வாராது என்று உணர்க.

கலித்தளை:—காய்முன் நிரை வருவது கலித்தளையாகும்.
அடிகொண்ட குனிப்பன்றே அரிபிரமர் முதலானோர்.

இக்கலியடியில் காய்ச்சீர் நின்று வருஞ்சீரின் முதல் அசையாகிய நிரையசையோடு சேர்ந்து நிற்பக் கலித்தளை அமைந்தவாறு காண்க.

வஞ்சித்தளை: — கனிமுன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித்தளையாகும்.

வினைத்திண்பகை விழச்செற்றவன்.

இவ்வஞ்சி யடியில் முதல் சீர் புளிமாங்கனி. வருஞ்சீரும் புளிமாங்கனி. கனிமுன் நிரை வந்திருப்பதால் இது ஒன்றிய வஞ்சித்தளை பெற்று வந்தது.

கனிமுன் நேர் வருவது ஒன்றாத வஞ்சித்தளையாகும்.

பூந்தாமரைப் போதலமர.

இவ்வஞ்சி யடியில் முதற்சீர் தேமாங்கனி. அடுத்த சீர் கூவிளங்கனி. முதற்சீர் கனியில் முடிந்து வருஞ்சீர் நேரில் தொடங்கியிருப்பது ஒன்றாத வஞ்சித்தளையாகும்.

எனவே, தளை ஏழு எனவும் ஆசிரியப்பாவுக்கு இரண்டு தளை, வெண்பாவுக்கு இரண்டு தளை, கலிப்பாவுக்கு ஒரு தளை, வஞ்சிப்பாவுக்கு இரண்டு தளை எனவும் அறிகிறோம்.

வெண்பாவில் வேற்றுத்தளை விரவாது. மற்ற பாக்களில் தளை விரவி வரும் என்று அறிக.

3. வெண்பா வகை

நான்காம் படிவத்தில் நான்கு விதப் பாக்களைப் பற்றியும் பொதுவாக அறிந்தோம். இப்படிவத்தில் வெண்பா, ஆசிரியப்பா ஆகிய இவற்றின் வகைகளை நோக்குவோம்.

அடிவரையறைபற்றி வெண்பா பின் வருமா பலவகைகளாகப் பிரிககப்பெறும்:—

1.	குறள் வெண்பா	— 2 அடிகளால் வருவது
2	சிந்தியல் வெண்பா	— 3 ,,
3.	நேரிசை வெண்பா இன்னிசை ,,	— 4 ,,
4	பஃறொடை வெண்பா	— 5 முதல் 12 அடிவரை வருவது
5.	கலி வெண்பா	— 12 அடியின்மிக்கு வருவது

(i) யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

இரண்டடியால் அமைந்திருப்பதால் இது குறள் வெண்பாவாகும்.

(ii) போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றம குமைக்க வருமுன் நமரங்காள்
ஏற்றுவந்தான் பொற்ரு ளிணை

மூன்று அடியால் அமைந்திருப்பதால் இது சிந்தியல் வெண்பாவாகும்.

(iii) மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்— [மின்னிறத்து
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய் போவதே போன்று.

நாலடியால் அமைந்திருப்பதால் இது நேரிசை வெண்பாவாகும்.

(iv) தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகலிலர் எஃகுடையர் தம்முட் குழீஇ.
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல் வானத்து
உம்பர் உறைவார் பதி.

நாலடியால் அமைந்திருப்பதால் இது இன்னிசை வெண்பாவாகும்.

(v) ஓ ஓ உவமம் உறழ்வின்றி ஒத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றூர் குடையெல்லாம் கீழ்மேலாய்
ஆவுதை களாம்பி போன்ற புனல் நாடன்
மேவாரை அட்ட களத்து.

இஃது ஐந்தடியால் வந்த பஃறொடை வெண்பாவாகும்.

ஏனைய உதாரணங்கள் வந்த வழிக் காண்க.

4. ஆசிரியப்பாவின் வகை

ஆசிரியப்பா:- (1) நேரிசை ஆசிரியப்பா (2) நிலை மண்டில ஆசிரியப்பா (3) இணைக்குறள் ஆசிரியப்பா (4) அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

ஈற்றயலடி முச்சீராய் மற்ற அடிகள் நாற்சீராய் முடிவது நேரிசை ஆசிரியப்பா.

(i) போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதர் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே.

இந்த ஆசிரியப்பாவில் ஈற்றயலடி மூன்று சீர்களைக்கொண்டு வந்திருப்பதால் இது நேரிசை ஆசிரியப்பா ஆயிற்று.

அணிநிழல் அசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிகழ் அவிரொளி வரதனைத் தவநனி
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.

(ii) எல்லா அடிகளும் நாற்சீரடிகளாக இருக்கும் ஆசிரியப்பா நிலைமண்டில ஆசிரியம் எனப்படும்.

இப்பாடலில் எல்லா அடியும் நந்நான்கு சீர்களைப் பெற்றிருப்பதால் இப்பாடல் நிலைமண்டில ஆசிரியமாகும்.

(iii) ஒரு பாடலின்கண் உள்ள அடிகளைத் தம்முள் எங்ஙனம் மாற்றியமைத்தாலும் பாடலின் ஓசையும் பொருளும் தவறுமல் நிகழும் ஆசிரியப் பாடல் அடிமறிமண்டில ஆசிரியம் எனப்படும்.

தீர்த்தம் என்பது சிவகங் கையே
ஏத்தருந் தலம் எழிற்புலி யூரே
மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே.

இப்பாடலில் எந்த அடியையும் எங்கு மாற்றிப் பொருள்கொள்ளினும் ஓசையும் பொருளும் மாறுமல் இருப்பதால் இப்பாடல் அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகும்.

(iv) முதலடியும் கடைசியடியும் நாற்சீரால் அமைய இடையே இருசீரடியும் முச்சீரடியும் ஐஞ்சீர் அடியும் வருமாறு பாடப்படும் ஆசிரியப்பா இணைக் குறள் ஆசிரியப்பா எனப்படும்.

தண்ணென் கடுக்கை கண்ணீர் கலுழ்வர
வெண்மதிக் கண்ணி சூடும்
கண்ணுதற் கடவுள்
புண்ணியப் பொதுவில் ஆடும் பூங்கழல் இறைஞ்சுதும்
விண்மிசை போதிய வீடுபெறற் பொருட்டே.

இப்பாடலில் முதலடியும் ஈற்றடியும் நாற்சீரான் அமைந்து, இடையில் இருசீரடியும் முச்சீரடியும் ஐஞ்சீரடியும் அமைந்திருப்பதால் இப்பாடல் இணைக் குறள் ஆசிரியப்பாவாம்.

ஆசிரியப்பாவின் சிறுமைக்கு எல்லே 3 அடி—பெருமைக்கு எல்லே 1000 அடி.

5. பாவினம்

ஒவ்வொரு பாவிற்கும் தாழிசை, துறை, விருத்தம் என்ற மூன்று இனம் உண்டு. குறள் வெண்பாவிற்கு மட்டும் சிறப்பாகக் குறட்

டாழிசை, வெண்செந்துறை என்ற இனங்கள் உண்டு. ஆகப் பாவினங்களாவன:—

வெண்பா	ஆசிரியம்	கலிப்பா	வஞ்சிப்பா
குறட்டாழிசை வெண்செந்துறை	ஆசிரியத் தாழிசை	கலித்தாழிசை	வஞ்சித்தாழிசை
வெள்ளொத்தாழிசை	ஆசிரியத்துறை	கலித்துறை	வஞ்சித்துறை
வெண்டுறை வெளி விருத்தம்	ஆசிரிய விருத்தம்	கலிவிருத்தம்	வஞ்சிவிருதம்

எனப் பாவினங்கள் 14 வகைப்படும். அவற்றுள் **ஆசிரிய விருத்தத்தை நோக்குவோம்:**

இது பெரும்பாலும் இயற்சீரானும் சிறுபான்மை வெண்சீரானும் அமைவது. ஆசிரிய விருத்தம் 6 சீர் முதல் எனைத்துச் சீரானும் பாடப்படும். எட்டுச் சீருக்கு மேல் பாடப்படும் விருத்தங்கள் சிறப்பில என்ப.

வந்தபின் மனைவி யாரும் வாய்த்தலில் நின்று வாங்கி
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி
வெந்தழல அடுப்பின் மூட்ட விறகிலலை என்ன மேலோர்
அந்தமில் மனையின் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார்.

இது அடிதோறும் 6 சீர்களாலாகிய ஆசிரிய விருத்தம்.

அம்பொன் நீடிய அம்ப லத்தினி லாடு வாரடி சூடுவார்
தம்பிரானடி மைத்தி றத்துயர் சால்பின் மேன்மை தரித்துளார்

நம்பு வாய்மை நீடு சூத்திர நற்கு லஞ்செய் தவத்தினால
இம்பர் ஞாலம் விளக்கி னாரிளை யான்கு டிப்பதி மாறனார்.

இப் பாடல் ஏழு சீர்களாலாகிய ஆசிரிய விருத்தம்.

ஏனையவும் வந்தவழிக் காண்க.

பயிற்சி

1. தளை எத்தனை வகைப்படும? அவற்றின் பெயரை எழுதுக

2. வெண்பாவின் வகைகள் யாவை?

3. ஆசிரியப்பாவின் வகைகளை எழுதி ஏதேனும் ஒன்றற்கு உதாரணம தருக.

4. கோடிட்ட இடங்களைத் தக்க சொற்கொண்டு நிரப்புக.

   a. மாமுன் நேர் வருவது — ஆகும்.

   b. காய்முன் — வருவது கலித்தளை.

   c —முன் — ஒன்றாத வஞ்சித்தளை.

   d. விளம்முன் — வருவது இயற்சீர் —

   e பஃறொடை வெண்பா — முதல் -- அடி வரையில் வரும்.

   f. வெண்பாவில் — வெண்டளையும் — வெண்டளையுமே வரும்.

   g. 12 அடிக்குமேல வரும் வெண்பாக்கள்—எனப்படும்.

   h. இணைக்குறள் ஆசிரியப்பாவின் முதலடியும் கடைசியடியும்—சீர்களாக இருக்கும்.

5. கீழ்க்கண்டவை சரியா தவரு என்று எழுதுக

a வெண்பா மூன்றடியால் வந்தால் சிந்தியல் வெண்பா எனப்படும்.

b. பஃறொடை வெண்பா எனைத்து அடியாகவும் வரும்.

c ஈற்றயலடி மூச்சீரான் வரும் ஆசிரியம் நிலை மண்டிலம் எனப்படும்.

d இணைக்குறள் ஆசிரியப்பாவில இடையே ஈரசைச் சீர் வரும்.

e வெண்டளையும் கலித்தளையும் சிறுபான்மை ஆசிரியப் பாவில வரும்.

f. ஆசிரிய விருத்தம 5 சீர் அடிகளாலும் வரும்

g மாமுன் நிரை வருவது இயற்சீர் வெண்டளை

h இன்னிசை வெண்பா நடுவில் தனிச்சீர் பெற்று வரும்.

VI அணி

நான்காம் படிவத்தில் உவமை, உருவகம், வேற்றுப்பொருள் வைப்பு என்ற அணிகளைக் கண்டோம். இப்படிவத்தில் வேறு சில அணிகளை நோக்குவோம்.

1. வேற்றுமை யணி

ஓங்க லிடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர்ஒன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

இப் பாடலின் முதல் இரண்டு அடிகளில் குறிப்பாக இரண்டு பொருள்களுக்கு ஒப்புமை கூறப் பட்டுள்ளது. பின் இரண்டடிகளில் அவற்றுள் ஒன்று சூரியன் எனவும், மற்றொன்று தமிழ் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் இரண்டையும் ஒன்ருகச் சொல்லிப் பின் வேறெனக் குறிப்பிடுவது காண்க.

வெளிப்படையாகவோ குறிப்பாகவோ, ஒப்புமை உடைய இரண்டு பொருள்களை ஒன்று போலச் சொல்லிப் பிறகு அவற்றைத் தனித்தனியே பிரித்துக் கூறுவது வேற்றுமை யணி எனப்படும்.

2. வஞ்சப் புகழ்ச்சி யணி

தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்

இப் பாடலில் கயவரைத் தேவருக்கு ஒப் பாகக் கூறியுள்ளார் ஆசிரியர். அது புகழ்ச்சி போன்று தோன்றும். ஆழ்ந்து நோக்கினல் தேவர்கள் எவ்வாறு நினைத்ததைச் செய்கிருர்களோ அவ்வாறே கயவரும் தாம் நினைத்ததைச் செய்கின் றனர். முன் பின் யோசியாமல் தீச்செயல்களை நினைத்தவுடன் செய்து பழிபாவங்களைத் தேடிக் கொள்கின்றனர் என்ற பழிப்புச் செய்தி போதரு கிறது. எனவே இது புகழ்வது போலப் பழித்தல் அல்லது வஞ்சப் புகழ்ச்சி யணி எனப்படும்.

புகழ்வது போலப் பழித்தல் வஞ்சப் புகழ்ச்சி யணி எனப்படும்.

3. நிரல்நிறை அணி

காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப! போர்ச்செழிய—நீதியால்
மண்ணமிர்தம் மங்கையர்தோள் மாற்ருரை ஏற்ருர்க்கு
நுண்ணிய வாய பொருள்.

இப்பாடலில் பாண்டியனை 'போதுசேர் தார் மார்ப! போர்ச்செழிய—என்று விளித்து நீதியால் மண்கா, அமிர்தம்து, மங்கையர்தோள் சேர், மாற் ருரைத் தாழ், ஏற்ருர்க்குக் குழை, நுண்ணிய வாய

பொருள் ஆய் எனப் பெயரையும் வினையையும் முறையாகச் சேர்த்துப் பொருள் கொள்வதால் இப் பாடலில் நிரல்நிறை அணி வந்துள்ளமை காண்க.

பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் வரிசையாக அமைத்துப் பொருள் கொள்ளுவது நிரல்நிரையணி எனப்படும்.

இன்னும் நிரல்நிறையணியில் வரும் வேறு பாடுகளை யெல்லாம் ஆசிரியர்வாய்க் கேட்டறிக.

பயிற்சி

1. சென்று செவியளக்கும் செமமையவாய்ச் சிந்தை [யுள்ளே
நின்றளவி லின்பம் நிறைப்பவற்றுள்—ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர் நோக்கொன்று
மலரிவரும் கூத்தன்றன் வாக்கு.

இப் பாடலில் அமைந்துள்ள வேற்றுமை யணியை விளக்குக

2. வஞ்சப் புகழ்ச்சி யணியை உதாரணம் தந்து விளக்குக.

3. நிரல் நிறையணியை ஓர் உதாரணம தந்து விளக்குக

VII. பொருளிலக்கணம்

உலகிலுள்ள உறுதிப் பொருள்கள் அறம் பொருள், இன்பம், வீடு என்ற நான்காகும்: அவற்றுள் வீடு சிந்தையும் மனமும் செல்லா நிலையை உடையது. ஆதலின் மக்களால் பேசவும் எழுதவும் படுபவை அறம், பொருள், இன்பம் என்ற மூன்றேயாம். அவற்றுள் இன்பம்—அகம் எனவும், ஏனைய அறமும் பொருளும் புறம் எனவும் தமிழ்நூல்களில் கூறப்படும்.

i. அகப் பொருள்

ஒத்த அன்பால் இயைந்த தலைவனும் தலைவியும் துய்க்கும் இன்பம். எக்காலத்தும் உள்ளத்தாலேயே நுகரப்படும் இன்பம். ஆதலின், அது அகம் எனப் பட்டது. இவ் வகைப் பொருளைப்பற்றிய பாடல்களே சங்க காலத்தில் மிக அதிகம். பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டும், குறிஞ்சிப் பாட்டும், எட்டுத்தொகை யில் உள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்து நூல்களும் அகப்பொருளைப் பற்றியனவேயாம்.

இவ் வகைப்பொருளை ஐந்து திணையாகப் பிரித்தனர். ஒவ்வொரு திணைக்கும் முதற் பொருள், கருப் பொருள், உரிப்பொருள் என்பனவற்றை வகுத்துக் கொண்டனர்.

நிலம் ஐந்து ஆவன :

முல்லை— காடும் காடுசார்ந்த இடமும்
குறிஞ்சி—மலையும் மலை சார்ந்த இடமும்
மருதம்—நாடும் நாடு சார்ந்த இடமும்
நெய்தல்—கடலும் கடல் சார்ந்த இடமும்
பாலை—முல்லையும் குறிஞ்சியும் அழிந்து தோன்றுவது

முதல், கரு, உரி—இவற்றின் விரிவுகளை ஆறும் படிவத்தில் காண்க.

ii. புறப் பொருள்

அறத்தையும் பொருளையும் பற்றிப் பாடுவது புறப்பொருள் என்று கண்டோம். புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய சங்ககால நூல்கள் புறப் பொருளைப் பற்றிப் பாடப்பட்டனவாகும். இப்புறத் திணையில் பெரும்பாலும் வீரமும் கொடையுமே கூறப் பட்டுள்ளன. இப்புறத்திணை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுப்பெயர், கைக்கிளை, பெருந்திணை என்று பன்னிரண்டு பிரிவுகளை உடையது. முதல் எட்டுப் பிரிவுகளும் போரைப் பற்றிய பிரிவுகள். இவ்வெட்டுப் பிரிவுகளும் வீரர்கள் சூடிக்கொள்ளும் பூவின் பெயரையே தம் பெயர்களாகக் கொண்டுள்ளன. இவற்றின் விரிவை எல்லாம் ஆறும் படிவத்தில் காண்க.

பயிற்சி

1. பொருளிலக்கணம் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

2. அகப்பொருளைப் பற்றிக் கூறும் பழைய நூல்கள் யாவை?

3 பதிற்றுப்பத்து எப்பொருளைப் பற்றி விரித்து உரைக்கிறது?

4. அகப்பொருளில் சொல்லப்படும் செய்தி என்ன?

5. புறப்பொருள் எவ்வெவற்றைப் பற்றி விரித்துக் கூறுகிறது?

6. வீரர்கள் சூடிக்கொள்ளும் பூக்களின் பெயரையே தம் பெயராகக் கொண்ட புறத்திணைகள் யாவை?

7. அகப்பொருளின் ஐந்திணைகள் யாவை?

8 திணையின் உட்பிரிவுகள் எவை?

9. ஐந்திணைப் பெயர்களையும் அவை எவற்றைக்குறிக்கும் என்பதையும் எழுதுக.

10. பத்துப்பாட்டில் அகப்பொருளைப் பற்றிக் கூறும் பாடல்கள் யாவை?

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

SENTAMIL ILAKKANAM

Fifth Form — Special Course

By
Vidwan T. S. RAMA RAO,
Tamil Pandit
Srinivasa Rao High School, Thiruvaiyaru
Vidwan V. GOPALAN, B. O. L.,
Tamil Pandit
Sivaswami Iyer High School, Thirukattupalli.

GENERAL BOOK COMPANY

T. H. S. Road,
KUMBAKONAM

9, Francis Joseph St.,
MADRAS-1

Copyright]

1956

[Price Rs. 0—10—0